## மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்
## 2013 ஏப்ரல் மாதம் 09 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு

### நிகழ்ச்சி நிரல்

I. **தவிசாளரின் அறிவிப்புக்கள்**

II. **அறிக்கைகளையும், ஆவணங்களையும் சமர்ப்பித்தல்**

III. **செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்**

IV. **மனுக்கள்**

V. **கேள்விகள்**

01. **கௌரவ நளிந்த ஜயதிஸ்ஸ உறுப்பினர் அவர்களினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல், சட்டம், ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், மனிதவலு மற்றும் தொழிற்துறை, பொருளாதார மேம்பாடு மின்சக்தி, மின்வலு, வியாபார விடயப் பொறுப்பு அமைச்சரிடம் 2013.02.19 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (கே/V (01)13/03)**

அ. பத்தரமுல்ல படபொத சிறீ சுதர்சன வித்தியாலயம் சிறப்பு பாடசாலைச் செயற்திட்டத்திற்கு உட்பட்டதா ?

ஆ. இதற்கிணங்க அதன் இரண்டாம் பிரிவை அகற்றுவது எவ்வருடத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்டது ?

இ. அப்பாடசாலையை சிறப்புப் பாடசாலை செயற்திட்டத்திற்கு உள்ளடக்குவதற்காக சிறீ ஜயவர்தனபுர கல்வி வலையத்தின் மாகாண சபை உறுப்பினர்களின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதா ?

ஈ. அப்பாடசாலையின் இரண்டாம் வகுப்பினை அகற்றுவதை தடுப்பதற்காக 2013.02.03 ஆந் திகதி வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தினால் உபகார வைபவம் ஒன்று நடத்தப்பட்டதா ?

உ. அப்பாடசாலையின் அதிபர் அதனுடன் தொடர்பு பட்டுள்ளாரா ?

ஊ. அவ் உபகாரம் கிடைக்கப்பெற்றவர்கள் யார் ?

02. **கௌரவ நளிந்த ஜயதிஸ்ஸ அவர்களினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல், சட்டம், ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், மனிதவலு மற்றும் தொழிற்துறை, பொருளாதார மேம்பாடு மின்சக்தி, மின்வலு, வியாபார விடயப் பொறுப்பு அமைச்சரிடம் 2013.02.19 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (கே/V (01)13/04)**

2005 இருந்து 2012 ஆண்டு வரை களுத்துறை கல்வி வலயத்தில் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில்

அ. ஒவ்வொரு பாடத்திலும் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை

ஆ. ஒவ்வொரு பாடத்திலும் சித்தி எய்திய மாணவர்களின் எண்ணிக்கை

இ. ஒவ்வொரு பாடத்திலும் சித்தி எய்திய விகிதாசாரம் என்பவற்றை

இந்த கௌரவ சபைக்கு சமர்ப்பிப்பீர்களா ?

03. **கௌரவ மஞ்சு சிறீ அரங்கல எதிர்க்கட்சித் தலைவர் அவர்களினால் விவசாயம், கமத்தொழில் அபிவிருத்தி, சிறு நீர்ப்பாசனம், கைத்தொழில் மற்றும் சுற்றாடல் விடயப் பொறுப்பு அமைச்சரிடம் 2013.03.19 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (கே/V (1)13/05)**

அ. 2010 ஆம் ஆண்டுக்காக மேல் மாகாணத்தின் கைத்தொழில் திணைக்களம் நூலினைக் கொள்வனவு செய்த ஸ்தாபனங்களின் பெயர்களைக் குறிப்பிடுவீர்களா ?

ஆ. அந்த நூல்களை வர்ணம் தீட்டுதல் செய்த ஸ்தாபனங்களின் பெயர்களைக் குறிப்பிடுவீர்களா?

இ. நூலினைக் கொள்வனவு செய்த ஸ்தாபனத்திலேயே வர்ணம் தீட்டல் மேற்கொள்ளப்பட்டது என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா?

ஈ. கொள்வனவு செய்யப்பட்ட நூலில் மஹர களஞ்சியத்திற்கு முழுப் பெறுமதியும் கிடைக்கப்பெறவில்லை என்பதனை ஏற்றுக்கொள்கின்றீர்களா ?

உ. அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட நூல்களில் மஹர களஞ்சியத்துக்கு கிடைக்கப்பெறாத நூலின் அளவு எவ்வளவு?

ஊ. இங்கு நிகழ்ந்துள்ள பாரதூரமான மோசடி தொடர்பாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் விசாரனை ஒன்று மேற்கொள்ளப்படுகின்றது என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா?

எ. அப்படியாயின் அதன் முன்னேற்றத்தினைத் தெளிவுபடுத்துவீர்களா?

ஏ. அம் முறைகேடு சம்மந்தமாகவும் உத்தியோகத்தர்கள் தொடர்பாகவும் திணைக்கள ரீதியில் ஒழுக்காற்று விசாரனை ஒன்றினை மேற்கொள்வீர்களா?

ஐ. அப்படியாயின் ஏன்?

04. **கௌரவ ஈ.சிரிகமல் பிலீசியன் த சில்வா அவர்களினால் போக்குவரத்து, விளையாட்டு, இளைஞர் விவகார, கலை, கலாசார நடவடிக்கை, கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கல் மற்றும் பகிர்ந்தளிப்பு நடவடிக்கை, கிராம அபிவிருத்தி அமைச்சரிடம் கேட்பதற்கு :**

(கே/v (1)13/06)

அ. வத்தளை எலகந்த சந்தியில் தனியார் பஸ்களை நிறுத்திவைப்பதனால் மிகப் பாரிய இடையூறு ஏற்படுகின்றது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. இந்த இடையூறை தவிர்ப்பதற்காக உரிய நடவடிக்கை ஒன்று எடுக்க திட்டமிடப்பட்டுள்ளதா?

இ. அப்படியாயின் அத்திட்டத்திற்காக நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டுள்ளதா?

ஈ. அப்படி இல்லையாயின் இக் கஷ்டத்தை தவிர்ப்பதற்காக எடுக்கும் நடவடிக்கை யாது ?

## VI. வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை

## VII. அமைச்சுக்களின் அறிவிப்புகளும் / அமைச்சர்களின் தகவல்களும்

## VIII. தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்

## IX. சபை நடவடிக்கை

**கௌரவ சபை நடவடிக்கை அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுவதற்கு**

பிரேரணை :

"2013.03.19 ஆந் திகதி நடைபெற்ற சபை நடவடிக்கைக் கூட்டத்தில் வரப்பட்ட இணக்கத்தின் படி இன்றைய தினம் (2013.04.09) ஆந் திகதி கலைந்து சென்ற பின் இச் சபையானது 2013.05.07 ஆந் திகதி மு.ப.09.30 இற்கு கூட வேண்டியதுடன் 2013.04.23 ஆந் திகதி (செவ்வாய்க் கிழமை) சபைக் கூட்டம் நடைபெறாத தினம் எனக் கருதிச் செயற்பட வேண்டும்."

## X. சபை நடவடிக்கை

**கௌரவ சபை நடவடிக்கை அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுவதற்கு**

பிரேரணை :

"2013.03.19 ஆந் திகதி நடைபெற்ற சபை நடவடிக்கை செயற்குழுக் கூட்டத்தில் இந்த சபை 2013.04.09 ஆந் திகதி கலைந்து சென்ற பின் 2013.05.07 ஆந் திகதி கூட்டத்திற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டபடியாலும் 2013.03.27 ஆந் திகதி நடைபெற்ற சபை நடவடிக்கை தொடர்பான செயற்குழுக் கூட்டத்தின் இணக்கத்தின் படி இன்றைய தினம் (2013.04.09 ஆந் திகதி) நிகழ்ச்சி நிரலில் பொது நடவடிக்கை விடயத்தின் கீழ் இலக்கம் 04 இல் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளை இன்றைய தினமே பூர்த்தி செய்ய இணக்கம் கிடைக்கப்பெற்ற படியாலும் அச் செயற்பாடுகளுக்கு விதி இலக்கம் 57(1), 57(4), 57(5), என்பவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளினால் எந்தவொரு தடையும் ஏற்படாது எனக் கருதி செயற்பட வேண்டும். "

## XI. பொது நடவடிக்கை

**01. கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல், சட்டம், ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், மனிதவலு மற்றும் தொழிற்துறை, பொருளாதார மேம்பாடு மின்சக்தி, மின்வலு, வியாபார விடயப் பொறுப்பு அமைச்சர் (மே.மா)**

பிரேரணை :

**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்**
**<u>திருமணப் பதிவுத் (திருத்தம்) சட்டமூலம்</u>**

***"இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம் - திருமணப்பதிவு (திருத்தம்) சட்டமூலம்"*** அனுப்பி அரசியல் அமைப்பின் 154 எ5(அ) உறுப்புரையின் கீழ் மேல் மாகாண சபைக்கு அனுப்பப்பட்டு, மேல் மாகாண சபையின் கருத்தினை ஏப்ரல் மாதம் 11 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பாராளுமன்றத்துக்கு அறிவிக்குமாறு 46அ(2)அ ஆகிய பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் கீழ் அறிவிக்கப்பட்டுள்ளபடியாலும் அவ் அறிவிப்பானது 2013.03.19 ஆந் திகதி மேல் மாகாண மாகாண சபைக் கூட்டத்தில் வெளியிடப்பட்டு, சட்ட நியதிச்சட்ட செயற்குழுவிற்கு அனுப்பப்பட்டு அச் செயற்குழுவின் அறிக்கையும் கிடைக்கப்பெற்றுள்ளபடியால் அது தொடர்பாக ஆராய்ந்து பார்த்தும், தொடர்ந்து குறித்த சட்டமூலம் தொடர்பாக மேல் மாகாண சபையில் கலந்துரையாடி எடுக்கப்படும் தீர்மானத்ததினை மேல் மாகாண மாகாண சபையின் கருத்தாக இலங்கை பாராளுமன்றத்திற்கு பெற்றுக் கொடுப்பதற்காகச் செயற்பட வேண்டும். "

**02. கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல், சட்டம், ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், மனிதவலு மற்றும் தொழிற்துறை, பொருளாதார மேம்பாடு மின்சக்தி, மின்வலு, வியாபார விடயப் பொறுப்பு அமைச்சர் (மே.மா)**

பிரேரணை :

**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்**
**<u>கண்டிய திருமண, மணநீக்கம் (திருத்தம்) சட்டமூலம்</u>**

***"இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம் கண்டிய திருமண, மணநீக்கம் (திருத்தம்) சட்டமூலம் "*** அரசியல் அமைப்பின் 154 எ5(அ) உறுப்புரையின் கீழ் மேல் மாகாண சபைக்கு அனுப்பப்பட்டு, மேல் மாகாண சபையின் கருத்தினை ஏப்ரல் மாதம் 11 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பாராளுமன்றத்துக்கு அறிவிக்குமாறு 46அ(2)அ ஆகிய பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் கீழ் அறிவிக்கப்பட்டுள்ளபடியாலும் அவ் அறிவிப்பானது 2013.03.19 ஆந் திகதி மேல் மாகாண மாகாண சபைக் கூட்டத்தில் வெளியிடப்பட்டு, சட்ட நியதிச்சட்ட செயற்குழுவிற்கு அனுப்பப்பட்டு அச் செயற்குழுவின் அறிக்கையும் கிடைக்கப்பெற்றுள்ளபடியால் அது தொடர்பாக ஆராய்ந்து பார்த்தும், தொடர்ந்து குறித்த சட்டமூலம் தொடர்பாக மேல் மாகாண சபையில் கலந்துரையாடி எடுக்கப்படும் தீர்மானத்தினை மேல் மாகாண மாகாண சபையின் கருத்தாக இலங்கை பாராளுமன்றத்திற்கு பெற்றுக் கொடுப்பதற்காகச் செயற்பட வேண்டும். "

**03. கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல், சட்டம், ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், மனிதவலு மற்றும் தொழிற்துறை, பொருளாதார மேம்பாடு மின்சக்தி, மின்வலு, வியாபார விடயப் பொறுப்பு அமைச்சர் (மே.மா)**

பிரேரணை :

**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்**
**<u>முஸ்லிம் திருமண, மணநீக்கம் (திருத்தம்) சட்டமூலம்</u>**

**"இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம் முஸ்லிம் திருமண, மணநீக்கம் (திருத்தம்) சட்டமூலம்"** அரசியல் அமைப்பின் 154 எ5(அ) உறுப்புரையின் கீழ் மேல் மாகாண சபைக்கு அனுப்பப்பட்டு, மேல் மாகாண சபையின் கருத்தினை ஏப்ரல் மாதம் 11 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பாராளுமன்றத்துக்கு அறிவிக்குமாறு 46அ(2)அ ஆகிய பாராளுமன்ற நிலையியற்

கட்டளையின் கீழ் அறிவிக்கப்பட்டுள்ளபடியாலும் அவ் அறிவிப்பானது 2013.03.19 ஆந் திகதி மேல் மாகாண மாகாண சபைக் கூட்டத்தில் வெளியிடப்பட்டு, சட்ட நியதிச்சட்ட செயற்குழுவிற்கு அனுப்பப்பட்டு அச் செயற்குழுவின் அறிக்கையும் கிடைக்கப்பெற்றுள்ளபடியால் அது தொடர்பாக ஆராய்ந்து பார்த்தும், தொடர்ந்து குறித்த சட்டமூலம் தொடர்பாக மேல் மாகாண சபையில் கலந்துரையாடி எடுக்கப்படும் தீர்மானத்தினை மேல் மாகாண மாகாண சபையின் கருத்தாக இலங்கை பாராளுமன்றத்திற்கு பெற்றுக் கொடுப்பதற்காகச் செயற்பட வேண்டும். ”

04. **கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல், சட்டம், ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், மனிதவலு மற்றும் தொழிற்துறை, பொருளாதார மேம்பாடு மின்சக்தி, மின்வலு, வியாபார விடயப் பொறுப்பு அமைச்சர் (மே.மா)**

பிரேரணை :

**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்**
**<u>பிறப்புக்கள் இறப்புக்கள் பதிவு (திருத்தம்) சட்டமூலம்</u>**

“**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம் பிறப்புக்கள் இறப்புக்கள் பதிவு (திருத்தம்) சட்டமூலம்**” அரசியல் அமைப்பின் 154 எ5(அ) உறுப்புரையின் கீழ் மேல் மாகாண சபைக்கு அனுப்பப்பட்டு, மேல் மாகாண சபையின் கருத்தினை ஏப்ரல் மாதம் 22ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பாராளுமன்றத்துக்கு அறிவிக்குமாறு 46அ(2)அ ஆகிய பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் கீழ் 2013. மார்ச் மாதம் 21 ஆந் திகதி அறிவிக்கப்பட்டுள்ளபடியாலும் அது தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய செயற்பாடுகள் தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்காக 2013.03.27 ஆந் திகதி கூடிய இச் செயற்குழு சபை நடவடிக்கை தொடர்பான செயற்குழுவில் கிடைக்கப்பெற்ற இணக்கத்தின் படி நடவடிக்கை ஒழுங்குவிதி இலக்கம் 63 ஆ(2), 63 ஆ(3) ஆகிய விதிகளினால் எந்தவொரு தடையும் ஏற்படாது எனக் கருதி குறித்த சட்டமூலம் தொடர்பாக இம் மாகாண சபையில் கலந்துரையாடி எடுக்கப்படும் முடிவினை மேல் மாகாண மாகாண சபையின் கருத்தாக இலங்கை பாராளுமன்றத்திற்கு பெற்றுக் கொடுப்பதற்காகச் செயற்பட வேண்டும். ”

## XII. தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கைகள்

### 01. கௌரவ அசோகா லங்காதிலக உறுப்பினர்

*“இலங்கை பஸ் சேவையானது அரசிடம் காணப்பட்ட போது அது கௌரவம் மிக்க சேவை ஒன்றாக காணப்பட்டது என்பது யாவரும் ஏற்றுக் கொண்ட விடயமாகும். நிரந்தர சம்பளத்துடனான அத்தியாவசிய சிறப்புரிமையானது அச் சேவையை மேற் கொண்ட யாவருக்கும் கிடைக்கப்பெற்றதுடன் மக்களும் தமது கௌரவத்தைப் பேணி பயமின்றி பயணத்தில் ஈடுபட வீதிக்கு வந்தனர் என்பதனை நாங்கள் யாவரும் அறிவோம்.*

*எனினும் தனியார் பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் பயணிகளின் கௌரவத்தை கருத்தில் கொள்ளாது அதில் பயணத்தில் ஈடுபட வேண்டியதுடன் எப்படி நேர அட்டவணையை தயாரித்து வழங்கிய பின்னரும் அதை கடைபிடிப்பவர்கள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றனர், அண்மையில் அரசினால் பஸ்கள் இறக்குமதி செய்யப்பட்டு பஸ் சேவையை வலுப்படுத்துவதாக பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் எவ்வளவு பஸ்கள் இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட போதும் இரவு பஸ் சேவை நடைமுறைப்படுத்தப்படாதவிடத்து மக்களுக்கு வசதிகள் கிடைக்கும் என்பதை நினைத்துப் பார்க்க முடியாது எனவே அரச பஸ் சேவைக்கு கொண்டுவரப்படும் பஸ் வண்டிகளை நீதியான சேவை ஒனறில் ஈடுபடுத்தி பி.ப. 6.00 மணி தொடக்கம் இரவு 11.00 மணியாவது மக்கள் இடை நடுவில் நேரத்தைக் களிக்காது பயணத்தில் ஈடுபடுவதற்கு ஏற்ற முறையில் பஸ் சேவையை பெற்றுக் கொடுக்குமாறு மேல் மாகண மாகாண சபை அரசிடம் வேண்டுகோள் விடுக்கின்றது”*

(பி/v (01)12/18)

### 02. கௌரவ நிரோசன் பாதுக்க உறுப்பினர்

*“ மேல் மாகாண சபையின் அதிகார பிரதேசத்தினுள் நிர்மாணிக்கப்பட்டுள்ள வியாபாரக் கடைத் தொகுதி, வைத்தியசாலைகள் உள்ளிட்ட பல்வேறுபட்ட கட்டட உரிமையாளர்களினால் அக் கட்டத்துக்கு உரிய வரைபடத்தினை அங்கீகரித்துக் கொள்ளும் போது வழங்கப்படும் பொது வசதிகள் மற்றும் வாகன தரிப்பிடத்தை பயன்படுத்தி வாடிக்கையாளரிடம் இருந்து நிதி அறவிடப்படுகின்றது. இவ் வாகனத் தரிப்பிடங்கள் அக்*

*கட்டடங்களுக்கான அங்கீகாரத்தினை வழங்கும் போது நகர அபிவிருத்தி அதிகார சபையின் பிரமாணங்கள் மற்றும் உள்ளூராட்சி ஸ்தாபனங்களின் சட்ட திட்டங்களுக்கு அமைய நியமப்படுத்தப்படுவதுடன் அவ்வசதிகளுக்கு கட்டணம் அறவிடுவது சட்ட விரோதமான நடவடிக்கை ஒன்றாகும்.*

*எனவே இந்த பொது வசதிகளான, தனிப்பட்ட வாகனத் தரிப்பிடங்களில் இருந்து மக்களிடம் நிதியினைப் பெற்றுக் கொள்வதனை இரத்துச் செய்யுமாறும் எதிர்காலத்தில் அவ்வாறான ஸ்தாபனங்களுக்கு எதிராக வழக்குத் தொடர உரிய உள்ளூராட்சி ஸ்தாபனங்களுக்கு அதிகாரத்தை பெற்றுக் கொடுக்குமாறும் இம் மேல் மாகாண மாகாண சபை பிரேரணை தெரிவிக்கின்றது".* (பி/v (01)12/19)

## XIII. சபை ஒத்திவைப்பு பிரேரணை

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

2013.03.27 ஆந்» திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா.)
மேல் மாகாண மாகாண சபை,
5ஆம் மாடி, B அலகு,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.